## குறியீடு

“**குறியீடு**” என்பது ஒரு புதிய வடிவமன்று. சங்க இலக்கியங்களில் அமைந்துள்ள **‘உள்ளுறை உவமம்’** என்ற உச்சியும் குறியீடும் ஒன்றுதான். அக இலக்கியங்களில் உரைக்க முடியாதவை, மறைக்க வேண்டுபவை ஆகியவற்றைக் குறிப்பாக உணர்த்த உள்ளுறை உவமம் பயன்பட்டது. குறியீடு என்பது அகம், புறம் என அனைத்து வகைக் கவிதைகளிலும் குறிப்பாக உணர்த்தப்படும் இலக்கிய உத்தியாகும்.

### குறியீட்டின் இலக்கணங்கள்

- சுட்டிய பொருளுக்கும் குறியீட்டுப் பொருளுக்கும் ஏதேனும் ஒரு தொடர்பு இருத்தல் வேண்டும்.
- சுட்டும் பொருள் என்பது எல்லோரும் அறிந்த ஒன்றாக இருத்தல் வேண்டும்.
- இத்தொடர்பின் வாயிலாக குறியீட்டுப் பொருள் நுண்ணிய முறையில் வெளிப்படுத்தப்பட வேண்டும்.

### குறியீட்டின் அடிப்படை

உவமேயத்தைக் கேட்போர் ஊகித்துக் கொள்ளுமாறு விட்டு விட்டு உவமையை மட்டும் கூறுவது உள்ளுறை உவமத்தின் அடிப்படை. இதுவே குறியீட்டின் அடிப்படை ஆகும்.

### சங்க இலக்கியங்களில் குறியீடு

**கலித்தொகை**

“உறுபுலி உருஏய்ப்பப் பூத்த வேங்கையைக்
கறுவு கொண்டு, அதன் முதல் குத்திய மதயானை
நீடு இரு விடர் அகம் சிலம்பக் கூய்த் தன்
கோடு புய்க்கல்லாது, உழக்கும் நாட! கேள்”

**- கபிலர்**

**பொருள்**

வேங்கைமரம் பூத்திருந்து ; அது புலி போல் தோன்றியது அதன் மீது சினம் கொண்டு மதயானை வேங்கையின் அடி மரத்தை தந்ததால் குத்தியது. ஆளப் பதிந்த தந்தத்தை அதனால் எடுக்க முடியவில்லை மலையின் குகைகளில் எதிரொலி கேட்கும் படி அது முழங்கியது இப்படி யானை முழங்கிடும் நாட்டை உடையவனே! கேள்!”

- இப்பாடலில் யானை தலைவனுக்கு குறியீடாக அமைகிறது
- தலைவியுடனான திருமணத்தை தோழி வலியுறுத்தியதை விரும்பாத தலைவன் அக்கூற்றை மறுத்ததற்கு யானை வேங்கை மரத்தை குத்தியது குறியீடு ஆகிறது.
- அவள் கூற்றை வேண்டாததாகக் கருதி தலைவன் வருந்துதலுக்கு தந்தத்தை எடுக்க இயலாமல் யானை தவிப்பது குறியீடு ஆகிறது.

### அகநானூறு

கோழிலை வாழைக் கோள்முதிர் பெருங்குலை
ஊழுறு தீங்கனி, உண்ணுநர்த் தடுத்த
சாரற் பலவின் சுளையொடு ஊள்படுபு
பாறை நெடுஞ்சுனை, விளைந்த தேறல்
அறியாது உண்ட கடுவன் அயலது
அறிவளர் சாந்தம் ஏறல் செல்லாது
நறுவீ அடுக்கத்து மகிழ்ந்து கண்படுக்கும்
குறியா இன்பம் எளிதின் நின்மலைப்
பல்வேறு விலங்கும் எய்தும் நாட!

**பொருள்**

தாமாகவே முதிர்ந்து பழுத்த இனிமையான வாழைக்கனிகள், உண்ணத் திகட்டும் இனிய பலாச்சுளைகள், நன்கு விளைந்த நறுந்தேன் ஆகிய மூன்றும் பாறைக்கண் அமைந்த பெரிய சுனை நீரில் விழுந்து மயக்கம் தரும் தேறலாக(கள்) மாறி உள்ளன. அச்சுனை நீரை அறியாது பருகிய ஆண் குரங்கு ஒன்று மயங்கியது.


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

பின்னர் அருகில் இருந்த மிளகுக் கொடிகள் படர்ந்துள்ள சந்தன மரத்தில் தாவி ஏறுவதற்கு முடியாமல் கீழே விழுந்து கிடந்த நறுமனை பூக்கள் ஆகிய படுக்கையில் விழுந்து களிப்புடன் உறங்குகிறது. இவ்வாறு தான் எதிர்பாராத வகையில் இன்பத்தை நின் மலையகத்தில் உள்ள பல்வேறு விலங்கினங்களும் எளிதாக பெற்று மகிழும் வளமுடைய மலைநாட்டு தலைவனே! என்று தோழி கூறுகிறாள்.

இப்பாடலில் ஆண்குரங்கின் செயல் தலைவனின் செயலுக்கும், சுனை நீர் தேரல் தலைவன் கொண்டுள்ள மயக்கத்திற்கும், சந்தன மரத்தில் ஏற முடியாமல் பூக்களில் படுத்து கிடக்கும் குரங்கின் செயல் திருமணம் செய்து கொள்ளாமல் இன்பத்தை மட்டும் நுகர நினைக்கும் தலைவனது செயலுக்கும் குறியீடுகளாக அமைந்துள்ளன.

**<u>புதுக்கவிதைகளில் குறியீடுகள்</u>**

**வியர்வை**

இந்த ஆதிரை பருக்கைகள்
வீழ்ந்ததும் பூமி பாத்திரம்
அமுதசுரபி

**–பால்வீதி அப்துல் ரகுமான்**

**பொருள்**

ஆதிரையிட்ட பருக்கையினால் அமுத சுரபியில் உணவு பெருகி கொண்டிருப்பது போல், உழைப்பால் உலகம் செழித்து வளர்கிறது. வியர்வை துளிக்கு ஆதிரை படுக்கை குறியீடு ஆகிறது. செழிப்புக்கு அமுதசுரபி குறியீடு ஆகிறது.

**திட்டம்**

வரங்கள் சாபங்கள்
ஆகுமென்றால் இங்கே
தவங்கள் எதற்காக?

**- அப்துல் ரகுமான்**

- திட்டங்கள் தீட்டினாலும் அவை நாட்டு நலனுக்கு பயன்படாமல் எதிராக போய் விடுவதை இக்கவிதை உணர்த்துகிறது.
- வரம் திட்டத்திற்கு குறியீடாகவும், சாபம் அதன் பயனற்ற விளைவுக்கும் குறியீடாக அமைந்துள்ளது.

19 - ஆம் நூற்றாண்டில் '**குறியீட்டியம்**' ஓர் இலக்கியக் கோட்பாடாக உருப்பெற்றது. பொதலேர், ரைம்போ, வெர்லேன், மல்லார்மே முதலானவர்கள் இக்கோட்பாட்டை விளக்கி வளர்த்தார்கள். தமிழ் மொழியில் தொல்காப்பியர் காலம் முதல் இப்பயன்பாட்டை அறிய முடிகிறது.

www.tnpscgroup4.in